கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.184/2023

அ.சா. 8 (LW 14 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பிரகாஷ் | **தொழில்** | |
| **த/க பெயர்** | அருணாச்சலம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **18.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு

**முதல் விசாரணை**

நான் நகர் மேற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 08.06.2023 அன்று அதே காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தேன். அன்று உதவி ஆய்வாளர் மலைச்சாமி பணியிலிருந்த போது நிலைய குற்ற எண். 224/2023 இதச பிரிவு 302 வழக்கில் இறந்து போன அழகுபாண்டி, த/பெ. சேகர் என்பவரின் துரித முதல் தகவல் அறிக்கையை என்னிடம் இரவு 08.00 மணிக்கு கொடுத்து நீதித்துறை நடுவரிடம் கொடுக்க சொன்னார். அதன்படி நான் நீதித்துறை நடுவர் எண்.1. அவர்களிடம் இரவு 10.00 மணி அளவில் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் திண்டுக்கல் நீதித்துறை நடுவரிடம் துரித அறிக்கையை கொண்டு போய் கொடுக்கவில்லை என்றாலும் காவல்துறை அதிகாரி சொன்னதன் பேரில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணிபுரிந்த காவல் நிலையத்திற்கு திண்டுக்கல் நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் 10 நிமிடத்தில் வந்து விடலாம்

**என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது இரண்டு மணி நேரம் காலதாமதமாக கொண்டு போய் நீதித்துறை நடுவரிடம் கொடுத்தற்கான காரணத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.18 17:38:46 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.